
# 2025 ஆம் ஆண்டு நான்காம் வகுப்பு இறுதித்தேர்வில் தமிழ்மொழிப் பாடத்தின் விவரங்கள்

திருமதி சுஜாதா

# இன்று தெரிந்துகொள்ளப் போவது

- மாணவர்களின் கையேடு
- தமிழ்மொழிப் பாடத்தின் வரைவு
- தேர்வுத்தாளின் உள்ளடக்கம்
- கட்டுரையில் பயன்படுத்தப்படும் பல்வேறு உத்திமுறைகள்
- மதிப்பீட்டு அட்டவணை


அடிப்படை மொழித்திறன்கள்
கொள்திறன்கள்
கேட்டல்
படித்தல்
பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்
ஆக்கத்திறன்கள்
எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்
பேசுதல்
எழுதுதல்
கருத்துப்பரிமாற்றத் திறன்கள்

# தமிழ்த் தேர்வின் நோக்கம்


- கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித் திறன்களில் மாணவர்களின் **அடைவு நிலையை அறிவது**

- தமிழ் பாடத்திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள கற்றல் விளைவுகளில் மாணவர்களின் அடைவு நிலையை **மதிப்பீடு செய்வது**

# தாள் 1 - கட்டுரை

மதிப்பெண்கள் – 15 (15%)

- 60 சொற்களுக்குக் குறையாமல்
- 4 படங்கள்
- 10 உதவிச் சொற்கள்


1
Instant Noodles
2
3
Instant Noodles
4

Shuqun Primary 树群小学

<u>கட்டுரை மதிப்பீடு</u>

தொடக்கநிலை 4   2025

பெயர் ______________________________

தேதி _____________________

கட்டுரைத் தலைப்பு ___________________________

கட்டுரை : _______________

| கருத்து | / 7 | ஆசிரியர் கருத்து |
|---|---|---|
| 1. தொடக்கம் | ✓ | |
| • உரையாடல்<br>• இனியச்சொற்றொடர்கள்<br>• கதாபாத்திர அறிமுகம் | | |
| 2. கதை வளர்ச்சி | ✓ | |
| • தொடர்புபடுத்தி எழுதுதல் | | |
| 3. முடிவு | ✓ | |
| • ஏற்புடையது<br>• கருத்துரைத்தல் – அறநெறி | | |

## கட்டுரை மதிப்பீடு

| மொழி | / 8 | ஆசிரியர் கருத்து |
|---|---|---|
| • ஆர்வமூட்டும் நடை | | |
| மொழியைக் கையாளும் திறன்<br>• சொல்லாட்சி<br>• எழுத்துப்பிழைகள்<br>• வாக்கிய அமைப்பு | | |
| • இனிய தொடர்கள் | | |
| • நிறுத்தற்குறிகள்<br>• முற்றுப்புள்ளி | | |

# கட்டுரையில் மாணவர்கள் செய்யும் பிழைகள்

- எழுத்துப் பிழை – ட த, குறில் நெடில், த ந, ட ண,
- வாக்கியப் பிழை – ஒருமையில் ஆரம்பித்து பன்மையில் முடித்தல்
- இலக்கணப்பிழை – காலங்கள், வேற்றுமை
- கதைத்தொடர்ச்சியின்மை
- குறித்த நேரத்தில் முடிக்க இயலாமை
- முடிவுரையை ஓரிரு வரிகளில் முடித்தல்

# தாள் 2 – மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்

**மதிப்பெண்கள் – 45 (45%)**

1) மூவிடப் பெயரும் வினையும்

➢ 5 வினாக்கள் - 10 மதிப்பெண்கள்

2) செய்யுள் / பழமொழி

➢ 4 வினாக்கள் - 8 மதிப்பெண்கள்

3) முன்னுணர்வுக் கருத்தறிதல்

- 4 வினாக்கள் - 8 மதிப்பெண்கள்

4) தெரிவுவிடைக் கருத்தறிதல்

- 3 வினாக்கள் - 6 மதிப்பெண்கள்

எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- 1 சுயவிடை - 4 மதிப்பெண்கள்

5) சுயவிடைக் கருத்தறிதல்

- 5 வினாக்கள் - 9 மதிப்பெண்கள்

## மூவிடப்பெயரும் வினையும்

மாறன் மீன் பிடித்தான்.

## செய்யுள் / பழமொழி

அகத்தின் அழகு ________________ தெரியும்.

(1) மனத்தில்
(2) அகத்தில்
(3) முகத்தில்
(4) செயலில் (     )

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

| | |
|---|---|
| ராமுவும் ரவியும் விளையாட்டுப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள். இருவருக்கும் பூப்பந்து என்றால் கொள்ளை ______________. இருவரும் விளையாட்டோடு கல்வியிலும் சிறந்து விளங்கினர். அவர்கள் தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டியில் ________________. அவர்கள் உலக விளையாட்டாளர்களோடு விளையாடத் திடலில் இறங்கினர். அவர்கள் மலேசிய வீரர்களை எதிர்த்துப் போட்டியிட்டனர். இருப்பினும் அவர்களுக்குப் போட்டி ______________ இருந்தது. அவர்கள் இறுதிவரை அதில் திறமையாக விளையாடினர். அவர்கள் ______________ பெற்று நமது நாட்டுக்குப் பெருமையைச் சேர்த்தனர். அவர்களை அனைவரும் பாராட்டினர். | Q10 ( ) <br> Q11 ( ) <br> Q12 ( ) <br> Q13 ( ) |

| | |
|---|---|
| **1. விருப்பம்** | **2. வெற்றி** |
| **3. சுலபமாக** | **4. பங்கேற்றனர்** |
| **5. சேர்ந்தனர்** | **6. விளையாடி** |
| **7. பிடிக்கும்** | **8 .கடினமாக** |

## தெரிவுவிடைக் கருத்தறிதல்

ராமு காட்டு வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தான். அவனுக்குப் பசி எடுத்தது. அவன் ஒரு மரத்தில் நிறைய மாங்கனிகள் தொங்குவதைப் பார்த்தான். அவன் மரத்தில் ஏறி சில பழங்களைப் பறித்துத் தின்றான். நன்கு கனிந்த பழங்கள் கிளையின் நுனியில் தொங்கிக்கொண்டிருந்தன. அதைப் பறிக்கக் கிளையின் நுனிக்குச் சென்றபோது மரத்தின் கிளை பாரம் தாங்காமல் முறிந்தது.

ராமு சட்டென பக்கத்துக் கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்க ஆரம்பித்தான். அப்போது அவ்வழியாக ஒரு முதியவர் வந்தார். அவரை உதவிகேட்டு அழைத்தான். அவரோ அவன் மீது ஒரு கல்லை எறிந்தார். ராமுவுக்குக் கோபம் வந்தது. “நான் கீழே வந்தால் உங்களைச் சும்மா விடமாட்டேன்!” என்றான். அவரோ சிரித்தபடி மீண்டும் ஒரு கல்லை எறிந்தார்.

அவன் மெதுவாக வேறொரு கிளையைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கி வந்தான். அவன் அவரிடம், “ஏன் என்னைக் காப்பாற்றாமல் கல்லை எடுத்து எறிந்தீர்கள்”, என்று வினவினான். அதற்கு அவர் “உன்னால் கீழே இறங்கி வர முடியும் என்பதால்தான்!” என்றபடி நடந்து சென்றார்.

ராமு ஏன் முதியவரின் மேல் கோபம் கொண்டான்?

(1) முதியவர் உதவாததால்

(2) மரத்தில் தொங்கியதால்

(3) முதியவர் கல்லை எறிந்ததால்

(4) முதியவர் சிரித்ததால் ( )

# எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

**Q17 . முதியவர் கல்லை எடுத்து எறியக் காரணம் என்னவென்று உன் நண்பர் கபிலனுக்கு ஒரு குறிப்பு எழுது. ( 4 மதிப்பெண்கள் )**

அன்புள்ள கபிலனுக்கு,

முதியவர் கல்லை எடுத்து எறிய ________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

இப்படிக்கு,
உன் நண்பன்

# ஏற்புடைய விடைகள்

**விடை 1**

அன்புள்ள கபிலனுக்கு,

முதியவர் கல்லை எடுத்து எறிய **காரணம் ராமுவால் உதவி இல்லாமல் தானே கீழே இறங்கி வர முடியும் என்று அவர் நினைத்ததே ஆகும்**.

**விடை 2**

அன்புள்ள கபிலனுக்கு,

முதியவர் கல்லை எடுத்து எறிய, **ராமுவுக்குக் கோபம் வரும். அவன் கீழே இறங்கி வருவான். (வாக்கியப்பிழை)**

**சுயவிடைக் கருத்தறிதல்   ( 9 மதிப்பெண்கள் )**

மணி ஓர் ஒன்பது வயது சிறுவன். அவனுக்கு மாம்பழங்கள் சாப்பிடப் பிடிக்கும். அன்று அவனுடைய தாத்தா அவனைக் காண அவன் வீட்டிற்கு வந்தார். தன் பேரனுக்காக அவர் நிறைய மாம்பழங்களை வாங்கி வந்திருந்தார். அவற்றைக் கண்டதும் மணி மகிழ்ச்சி அடைந்தான். உடனே, அவன் ஒரு மாம்பழத்தை வெட்டிச் சாப்பிட்டான். அது இனிப்பாகவும் சுவையாகவும் இருந்தது. அவன் இன்னும் இரண்டு மாம்பழங்ளைச் சாப்பிட்டான்.

மணி செய்வதைப் பார்த்த அம்மா மாம்பழத்தை அதிகம் சாப்பிட வேண்டாம் என்று அவனிடம் அறிவுரை கூறினார். ஆனால், மணி அதைக் கேட்கவில்லை. அன்றிரவு மணி கடுமையான வயிற்று வலியால் துடித்தான். அம்மா அவனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். மருத்துவர் அவனுக்கு மருந்து கொடுத்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவன் குணமடைந்தான்.

# ஏற்புடைய விடைகள்

**Q18.** மணிக்கு என்ன சாப்பிடப் பிடிக்கும்? (1 மதிப்பெண்)

மணிக்கு மாம்பழங்கள் சாப்பிடப் பிடிக்கும். (1மதிப்பெண்)

**Q22.** அம்மா எதனால் மணியை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்? (2 மதிப்பெண்கள்)

மணிக்குக் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டதால் அம்மா அவனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். (2 மதிப்பெண்கள்)

மணி வயிற்று வலியால் மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். (1 மதிப்பெண்)

# தாள் 3 – கேட்டல் கருத்தறிதல்

**மதிப்பெண்கள் – 10 (10%)**

1) படங்களைத் தெரிவு செய்தல்
   - 3 வினாக்கள் - 3 மதிப்பெண்கள்
2) 1 எதிருரைப் பனுவல்
   - 1 வினா - 1 மதிப்பெண்
3) கேட்டல் கருத்தறிதல் (3 பனுவல்கள்)
   - 6 வினாக்கள் - 6 மதிப்பெண்கள்

# கேட்டல் கருத்தறிதல்

## எதிருரைப் பனுவலுக்கான மாதிரி வினா

| | |
|---|---|
| அண்ணன்: | இந்திரா, உன் முகம் ஏன் வாடியிருக்கு? |
| இந்திரா: | அப்படியெல்லாம் ஒன்னுமில்லே அண்ணா.... |
| அண்ணன்: | இந்திரா, நா உன் அண்ணன்தானே? என்கிட்ட சொல்லு. என்னால் முடிந்த உதவிய செய்யுறேன். |
| இந்திரா: | நா.. நா... வகுப்புக் கணக்குத் தேர்விலே நான் எல்லா கணக்கையும் செய்து முடிக்கல. அதனால தேர்வுல எனக்குத் குறைவான மதிப்பெண்கள்தான் கிடைச்சது. எனக்கு என்ன செய்றதுனு தெரியல. |
| அண்ணன்: | ம்ம்ம்.......... |

இந்திராவிடம் அண்ணன் என்ன பதில் சொல்லியிருப்பார்?

1. நீயே சொந்தமாகப் படி.
2. எனக்குக் களைப்பாக இருக்கிறது.
3. நான் உனக்கு உதவி செய்கிறேன். ( )

# தாள் 4

## வாய்மொழி

**மதிப்பெண்கள் – 30 (30%)**

1) வாய்விட்டு வாசித்தல்
   - 10 மதிப்பெண்கள்

2) பட உரையாடல்
   - படத்தைப் பற்றி விவரித்துச் சொல்லுதல்

     10 மதிப்பெண்கள்
   - படத்தோடு தொடர்புடைய உரையாடல்

     10 மதிப்பெண்கள்

# வாசிப்புப் பகுதி

ஒருநாள் வெளியூரிலிருந்து பயணி ஒருவர் வந்தார். அவர் ஒரு கடையில் தம் நண்பர்களுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அவர் அருகில் இருந்த கைப்பெட்டியைத் திருடன் ஒருவன் பார்த்தான். திடீரென்று அவன் அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடினான். “திருடன்! திருடன்!” என்று கூவிக் கொண்டே பலர் அவனைத் துரத்தினர். அந்தச் சத்தத்தைக் கேட்டுக் காவலர் ஒருவர் அங்கு வந்தார். அவர் திருடனைப் பின்தொடர்ந்து சென்று அவனை மடக்கிப் பிடித்தார். அதன்பின்னர், அவர் அவனைக் காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றார்.

# “PEARS” உத்தி முறை








| | |
|---|---|
| இடம் & மக்கள் | - **P**eople & **P**lace |
| முகபாவனை & சூழல் | - **E**motion & **E**nvironment |
| நடவடிக்கை & செயல் | - **A**ctivity & **A**ction |
| காரணம் விளைவு | - **R**eason & **R**esolution |
| ஆலோசனை & தீர்வு | - **S**olution & **S**uggestion |

# பட உரையாடல்




SINGAPORE
Student
Learning
Space
Login
Username
Username
Password
Password
LOGIN
Forgot Password
If you have difficulty resetting your password, refer to Login Troubleshooting Tips for ways to get help.

# உயர்தமிழ்

## தாள் 1 - கட்டுரை

( 1 ) தலைப்புக் கட்டுரை

( 2 ) தொடக்கவரிகளைப் பயன்படுத்திக் கதையை முடித்தெழுதுதல்

# உயர்தமிழ்

## தாள் 2 – மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்

- ✓ பிழைத் திருத்தம்
- ✓ வாக்கியங்களை முடித்தெழுதல்
- ✓ கருத்தறிதல் 1 - சுயவிடை
- ✓ கருத்தறிதல் 2 - சுயவிடை


# சுயவிடைக் கருத்தறிதல்

## இரண்டு பனுவல்கள்

கதையையொட்டி இடம்பெறும் கருத்தறிதலில்

உயர்சிந்தனைத் திறன்களையும் சொல்வளத்தையும்

சோதிக்கும் வகையில் வினாக்கள் இடம்பெறும்.



# நன்றி